NOOLAHAM
FOUNDATION

# நூலக நிறுவனம்
# மாதாந்த அறிக்கை
# வைகாசி 2019

**தொகுப்பு : மியூரி கஜேந்திரன், ஆர்த்தியா சத்தியமூர்த்தி,  ஷாலினி யதூஸ்**

**மேற்பார்வை : குலசிங்கம் சோமராஜ்**

**தொகுப்பு திகதி : 2019-06-21**

**ஒப்புதல் : ஆளுகை அவை - நூலக நிறுவனம்**

**ஒப்புதல் திகதி :  2019-06-29**

**வணக்கம்**

நூலக நிறுவனத்தின் 2019 வைகாசி மாத ஆவணமாக்கல் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

**எண்ணிம ஆவணவாக்கம் (Digital Preservation)**

| | | | May |
|---|---|---|---|
| மின்வருடல் | நூலகம் | ஆவணங்கள் | 808 |
| | | பக்கம் | 56,798 |
| | யாழ்நூலகம் | ஆவணங்கள் | 11 |
| | | பக்கம் | 1,322 |
| | யாழ்பல்கலை | ஆவணங்கள் | 0 |
| | | பக்கம் | 0 |
| | மொத்தம் | ஆவணங்கள் | 819 |
| | | பக்கம் | 58,120 |
| சரிபார்க்கப்பட்டது | | ஆவணங்கள் | 943 |
| | | பக்கம் | 54,088 |
| பக்கம் தவறியது | | ஆவணங்கள் | 7 |
| | | பக்கம் | 578 |
| தரமேம்படுத்தியது | | ஆவணங்கள் | 3 |
| | | பக்கம் | 204 |
| பக்கம் சிதைந்தது | | ஆவணங்கள் | 1 |
| | | பக்கம் | 80 |
| மீள்வருடப்பட்டது | | ஆவணங்கள் | 10 |
| | | பக்கம் | 280 |
| வலைத்தளத்தில் அடங்காதவை | | ஆவணங்கள் | 1 |
| | | பக்கம் | 96 |

### எண்ணிம நூலகம் (Digital Library)

- ஆவணங்களுக்கான 570 பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.
- ஆவணங்களுக்கான 412 கட்டுரை இணைக்கப்பட்டுள்ளது.

### சேகர அபிவிருத்தி (Collections Development)

இம் மாதம் வேதா லாங்க திலக, குமரன், சிவதாசன், செம்பியன் செல்வன், குமாரவேல், வே. ஆகிய எழுத்தாளர்களுடைய ஆவணங்களும் சசூலன் மற்றும் பரணிதரன், அவர்களினால் சேகரிக்கப்பட்ட ஆவணங்களும் மற்றும் சிவதொண்டன் நிறுவனத்தினது ஆவணங்களும் மின்வருடப்பட்டுள்ளன. ஆவணங்களை பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள். அரியாலையில் இருந்து 248 புத்தகங்கள் ஆவணப்படுத்துவதற்க்காக எடுத்து வரப்பட்டு ஆவணப்படுத்திய பின்னர் மீளக் கொடுக்கப்பட்டது.

### ஆவணவாக்க அனுமதிகள் (Rights Management)

வைகாசி மாதத்தில் கீழ்வருவோர் தமது வெளியீடுகளை ஆவணமாக்குவதற்கான அனுமதியினை பதிவு செய்துள்ளனர்.

- எழுத்தாளர்கள்
    - வேதமுத்து குமாரவேல்
    - பி. தியான்
    - □ீராமகிருஸ்ஷ்ணா உதயனன்
    - கல்லியப்பன் உலகநாதன்
    - குமாரசாமி சோமசுந்தரம்
    - O.A. மாரியப்பன்
    - ஷர்மினி ராமநாதன்
    - பழனி மனோகரன்

### காப்புப்படி (Backup)

62501-66500 வரையான ஆவணங்கள் அனைத்தும் சரிபார்க்கப்பட்டு வன்தட்டுக்களில் காப்புப்படி எடுக்கப்பட்டுள்ளது.

### Master-files and Applications Backup

இம்மாதம் எடுக்கப்படவில்லை. கடைசியாக மார்கழி 2018 .இல் எடுக்கப்பட்டது.

**ஆவணகம் வலைத்தளம் (aavanaham.org)**

ஆவணகம் (aavanaham.org) வலைத்தளத்தில் வைகாசி மாதம் கீழ்வரும் விடயங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| மொத்த ஆவணங்கள் | 449 |
| | May |
| குறுங்கால ஆவணங்கள் | 24 |
| படங்கள் சேகரம் | 324 |
| எண்ணிம எழுத்தாவணங்கள் | 11 |
| கையெழுத்து ஆவணங்கள் | 8 |
| கல்வி வளங்கள் | 33 |
| வாய்மொழி வரலாறுகள் | 5 |
| நூற்பட்டியல் | 33 |
| ஒலிச் சேகரம் | 11 |
| | |

**பயனர் சேவை (User Service)**

| | நூலகம் | ஆவணகம் |
|---|---|---|
| | May | |
| பயனர்கள் | 27,599 | 1,587 |
| புது பயனர்கள் | 23,582 | 1,432 |
| முன்னைய பயனர்கள் | 4,017 | 155 |
| புது பயனர்கள் வீதம் | 85.45% | 90.23% |
| பார்வையிட்ட பக்கங்கள் | 263,433 | 13,649 |
| சராசரி நேரம் | 0:04:06 | 0:03:48 |
| முதற்பக்கவெளியேறல் வீதம் | 55.27% | 47.59% |

## செயற்றிட்டங்கள் (Projects)

### 1. EAP

இம்மாதத்திற்கான (வைகாசி மாதம்) EAP 1260 செயற்றிட்டத்திற்க அமைவாக பதினான்கு கட்டுக்கள் கொண்ட 2334 பக்க சுவடிகள் சுத்தம் செய்யப்பட்டு, எண்ணிமப்படுத்தப்பட்டன. அவை தொடர்பான விபரங்கள் மூதரவுத்தாளில் பதியப்பட்டன. இச் சுவடிக்கட்டுக்கள் திருவிளையாடற் புராண வசனம், மருத்துவம், மாந்திரீகம், வாய்கட்டுதல், வஞ்சனை செய்தல், உடலறி விளக்கம், வில்லிபுத்தூராழ்வார் மகாபாரதம், சிவஞானசித்தியார் பரபக்கம், மூலிகைகளின் பெயர்கள் அடங்கியது, அகத்தியநயனார் அருளிச் செய்த நாலு காண்ட வித்தையும் 3 வது இந்திரசால வித்தை 4வது மந்திரகாண்ட மேத வித்தை ஆகியவற்றை உள்ளடக்கியதாக அடையாளங்காணப்பட்டன.

சுவடிக் கட்டுக்களுக்கு பொறுப்பானவர்களுக்கு எண்ணிமப்படுத்தப்பட்ட சுவடிகளின் பிரதி இறுவட்டுக்களில் கொடுக்கப்பட்டது. மேலும் கோட்டக்கல்வி அதிகாரி யோகநாதன் அவர்கள் கிட்டத்தட்ட 500 பக்கங்கள் கொண்ட இரண்டு கட்டு சுவடிகள் எண்ணிமப்படுத்துவதற்க்காக தந்தார்.

சித்த மருத்துவத்தில் சக்கரவர்த்தி என பட்டம் பெற்ற 80 வயது மதிக்கத்தக்க சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை அவர்களிடம் 20 சுவடிக்கட்டுக்கள் இருப்பதாக அறிப்பட்டன. முதற்கட்டமாக 7 கட்டுக்கள் எண்ணிமப்படுத்துவதற்க்காக தந்தார்.

### 2. தொழிற்கலை ஆவணப்படுத்தல்

இம்மாதத்திற்கான (வைகாசி மாதம்) தொழிற்கலை ஆவணப்படுத்தல் செயற்திட்டத்திற்கு அமைவாக 27 தொழிற்கலை சார்ந்த புகைப்பட ஆவணங்கள் ஆவணகம் வலைத்தளத்தில் இணைக்கப்பட்டன.

### 3. வாய்மொழி வரலாறு ஆவணப்படுத்தல்

இம்மாதத்திற்கான (வைகாசி மாதம்) வாய்மொழி வரலாறு ஆவணப்படுத்தல் செயற்றிட்டத்திற்கு அமைவாக வடக்கில் 10 வாய்மொழி வரலாறுப் பதிவுகளும் மலையகத்தில் 15 வாய்மொழி வரலாற்றுப் பதிவுகளும் பதிவுசெய்யப்பட்டன.

### 4. அரியாலை ஊர் ஆவணப்படுத்தல்

இம்மாதத்திற்கான (வைகாசி மாதம்) அரியாலை ஊர் ஆவணப்படுத்தல் செயற்திட்டத்திற்கு அமைவாக அரியாலை ஊர் ஆவணப்படுத்தல் தொடர்பான நூல் தொகுப்பு ஆரம்பிக்கப்பட்டது.

மேலும் அரியாலையில் இருந்து 04 வாய்மொழி வரலாற்றுப் பதிவுகளும் பதிவுசெய்யப்பட்டன..

### 5. கோவில்கள் ஆவணப்படுத்தல்

இம்மாதத்திற்கான (வைகாசி மாதம்) கோவில்கள் ஆவணப்படுத்தல் செயற்றிட்டத்திற்கு அமைவாக வடக்கில் கலட்டி, கரணவாய், வதிரி, இமையாணன், உடுப்பிட்டி, அச்சுவேலி, வளலாய், இடைக்காடு, தொண்டைமானாறு, அண்ணாசிலையடி கரவெட்டி, வரணி, குடத்தனை, கொற்றாவத்தை, காரைநகர் ஆகிய இடங்களிலுள்ள கோவில்கள் புகப்படங்கள் மற்றும் காணொளிகளுடன் ஆவணப்படுத்தப்பட்டது.

## வழிகாட்டுநர் சபை (Regulatory Board)

இம்மாதம் ஒரு கூட்டம் இடம்பெற்றது. அதற்கான இணைப்பு

- வைகாசி 12, 2019

https://docs.google.com/document/d/18KpiytjCfDrpPkKunO6w6Vr88ATK74lotS0aZmC_bpk/edit

**வரவு செலவு அறிக்கை (Financial Statement)**

**செலவு**

| | |
|---|---:|
| ஆளணியிருக்கான கொடுப்பனவுகள் | 312,525.00 |
| தொடர்பாடல் | 8,414.71 |
| மின்சாரம் | 4,083.00 |
| வாடகை | 30,000.00 |
| உபகரணங்களிற்கான செலவு | 297,500.00 |
| நிர்வாகச் செலவு | 78,348.00 |
| செயற்றிட்டச் செலவு | - |
| ஏனைய செலவுகள் | 70,046.33 |
| **மொத்த செலவு** | **800,917.04** |

* அண்ணளவான மதிப்பீடு

**வரவு**

| **நன்கொடை** | **May** |
|---|---:|
| நூலகம் - அவுஸ்ரேலியா | 265,000.00 |
| நூலகம் - ஐ.அமெரிக்கா | 5,000.00 |
| நூலகம் - இங்கிலாந்து | 500,000.00 |
| நூலகம் - கனடா | 30,000.00 |
| **மொத்த வரவு** | **800,000.00** |

இலாப நோக்கற்று இயங்கும் நூலக நிறுவனம் கொடையாளர்களின் நன்கொடையிலேயே இயங்கி வருகின்றது. அவ்வகையில் நன்கொடை வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள். தொடர்ந்தும் எம் பணிகளுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.

நூலக நிறுவனம்